# இறைதூதன்

*Messenger of God - BABA*




எமது
வாசகர்கள்,
சாயி அன்பர்கள்
அனைவருக்கும்
எங்கள்
உள்ளம் கனிந்த
புதுவருட, பொங்கல்
வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்
கொள்கின்றோம்.


சர்வமதப் பத்திரிகை

முரசு 56

தை 2003

மாதம் ஒரு முரசு

விலை ரூபா 10\-

# சுவாமியின் வழியில் நாமும்....

23-11-2002 சுவாமியின் அவதார தினத்தில்
திருமதி சிவமலர் சுப்பிரமணியம்
ஆற்றிய உரையின் ஒரு பகுதி பிரசுரமாகிறது.
தொகுப்பு: மி. சுனேந்திரா

ஆன்மீக சாதனை சிறிதளவு செய்தால் கூட நாம் பெரும் பாவத்திலிருந்து காப்பாற்றப்பட்டவராவோம் என்று பகவத் கீதையில் கிருஷ்ண பகவான் உறுதி மொழியாகக் கூறியுள்ளார். அதாவது ஒரு சிறிதளவாவது ஆன்மீக சாதனை செய்தால் பெரும் பாவம், பயம் என்பவற்றிலிருந்து காப்பாற்றப்பட்டவராவோம்.

நாம் எல்லோரும் இந்த ஆன்மீக செயற்பாட்டை பிற்போடுவது என்பது கூடாததாகும். ஆன்மீக சாதனையை செய்ய இன்றே ஒவ்வொருவரும் செய்ய முன்வரவேண்டும், முதுமையில் தான் இவற்றைப் பற்றி சிந்திப்பம் இப்போது நாம் வாழ்க்கையை அனுபவிப்போம் என்று நினைக்கக் கூடாது. ஏனெனில் நாம் அழியும் காலத்திலும் கூட எம்முடன் கூட வருவது ஆன்மீக சாதனையின் விளைவுகள் தான்.

இன்று நாம் பகவானின் 77வது பிறந்த தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். அவரது திருவடியில் சரணடைந்து அவர் வழியிலேயே சென்று அவரது அறிவுரைகளை எண்ணத்தில் பதித்து நடந்தோம் என்றால் தான் நாம் அவரை வணங்கி வழிபடுவதற்காக எமக்குக் கிடைத்த பிரதிபலன் எனச் சொல்லக் கூடியதாக இருக்கும்.

இதை இன்று உணராமல் விட்டுவிட்டு பின்னால் நாம் வருந்துவது நல்ல தல்ல. ஒவ்வொருவரும் வாழும் போது பிறருக்கு உதவி செய்து எல்லோரையும் மகிழ்வித்து தானும் மகிழ்ந்திருக்க வேண்டும். மனிதனுடைய உறுப்புக்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு தொழிற்பட வேண்டும் என்று சுவாமியே கூறியுள்ளார்.

நல்ல செயல்களையே செய்ய வேண்டும். இல்லாது போய் பிற்காலத்தில் சுவாமியைப்பற்றி உணராமல் போய் விட்டோமே அவர் வழியில் நடக்காமல் விட்டு விட்டோமே என வருந்துவதால் எந்தப் பயனும் இல்லை.

## ஜெனாலியின் கதை

இப்போது எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது ஜெனாலி என்ற வெளிநாட்டு பெண்மணி, கவிதை எழுதுவதில் சிறந்தவர். 15 வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கினார். இப்படியான ஒரு மனவருத்தத்தின் போதே அவர் அந்தக் கவிதையை எழுதினார்.

அதாவது அவரது பாடசாலை நாட்களில் ஒரு விடுமுறை வந்தது. அந்த விடுமுறைக்கு ஜெனாலியின் நண்பர்கள் எல்லாரும் காரில் ஊர் சுற்றத் தீர்மானித்தார்கள். ஆனால் ஜெனாலிக்கு வயது 15 அவளால் அவர்களுடன் போக முடியாத நிலை கார் லைசன்ஸ் எடுக்க ஜெனாலிக்கு வயது போதாது அதனால் ஜெனாலியை விட்டு விட்டுப்போக தீர்மானித்தார்கள். ஜெனாலியின் மனது இதை ஏற்கவில்லை. விடுமுறையை நினைத்து வெறுப்பாகவே இருந்தது.

அந்த காலத்தில் ஜெனாலியின் அத்தை ஒருவரிடமிருந்து கடிதமொன்று வந்தது அதில் விடுமுறையை தன்னுடன் கழிக்க வருமாறு அத்தை கேட்டிருந்தா. ஜெனாலிக்கு அத்தையைத் தெரியும் ஆனால் அத்தையின் அன்பான, பண்பான உள்ளம் தெரியாது. ஏனெனில் நெருங்கி உரையாடி மகிழ்ந்திருக்கவில்லை. இருந்தும் வேறு வழியின்றி அத்தையுடன் விடுமுறையைக் கழிக்க புறப்பட்டார்.

அத்தை வீடு சென்ற ஜெனாலிக்கு ஒரே அதிர்ச்சி ஏனெனில் அவருடைய 50 வயது அத்தை இந்த வயதிலும் மிகவும் அழகாகவும் இளமையாகவும் காணப்பட்டார். 16இல் அழகா இருப்பது இறைவன் கொடுத்த அருள் 50இல் அழகாக இருப்பது ஆன்மீக சாதனைகளின் விளைவு உண்மையில் ஒரு ஆன்மீக சாதகருடைய முகம் மிகவும் பிரகாசமாகத் தான் எந்நேரமும் காணப்படும். அதே போன்றே ஜெனாலியின் அத்தையும் காணப்பட்டார்.

ஜெனாலியின் விடுமுறை மிகவும் மகிழ்ச்சியாகக் கழிந்தது. அவருடைய அத்தை ஒரு புத்தகக்கடை வைத்துள்ளார். அங்கு தானும் அத்தையுமாக சேர்ந்து சென்று பாட்டுக்கள், கவிதைகள் எழுதி மகிழ்ந் திருந்தார்கள். பின் அத்தையை விட்டுப் பிரியமனமின்றி தன் பாடசாலை வாழ்க்கையைத் தொடர வீடு திரும்பினார். சில காலம் சென்றது ஜெனாலி பரீட்சை எழுதும் வேளை ஓர் அழைப்பு வந்தது.

அத்தை புற்று நோயால் அவஸ்தைப்படுகின்றா நீ வந்து பார்க்க வேண்டும் என்று

பரீட்சை நடந்து கொண்டிருப்பதால் அதை எழுதி முடித்து விட்டு அத்தையிடம் சொல்லலாம் என நினைத்தார் ஜெனாலி. ஆனால் இவர் போகு முன்பே அத்தையின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்து விட்டது அந்நேரம் அத்தையைப் பிரிந்த மன உருக்கத்தில் கவிதை ஒன்று எழுதுகின்றாள். அதன் சாராம்சத்தில் சிவற்றைப் பார்த்தால்,

### கவிதை

"எனக்கு முன்பே தெரியாமல்
போய்விட்டதே
நாம் அன்று மழையில்
நனைந்தோமே
எவ்வளவு சந்தோசமாக
இருந்தது.
நீங்கள் எனைப் பிரிவீர் எனத்
தெரிந்திருந்தால்
உங்கள் கையை விட்டு
இருக்க மாட்டேனே.
கையை இறுகப்பிடித்
திருப்பேனே"
இப்படி நடக்குமென்று
தெரிந்திருந்தால்
"உங்கள் குரல் இனிமையை
மாலையாக்கி என் நெஞ்சில்
கோர்த்து மகிழ்ந்திருப்பேனே
எனக்கிங்கு இது தெரியாமல்
போய் விட்டதே.
என் அன்புப் பொக்கிசமே!
என்னை விட்டு ஏன்
போனீர்கள்..?"

என்று அழுது புலம்பி எழுதுகிறாள். ஏனெனில் ஒரு அன்பான, உண்மையான, தெய்வீகப்பண்புள்ள அத்தையை இழந்து விட்டோமே என்ற தாபத்தில் எழுதுகிறாா். அது மட்டுமா ..? அவருடைய நல்ல நல்ல கருத்துக்களை எடுக்காமல் போய்விட்டேனே..

கடவுளே.! இப்படி நடக்கும் என்று தெரிந்திருந்தால் என் தீய குணங்களை எல்லாம் விடடு ஒழித்து உன் திருவடிகளில் பணிந்து பாடி பரவி இருப்பேனே என் அத்தை என்னுடன் யுகம் யுகமாக வாழவேண்டும் என்று மிகவும் மனம் உடைந்த நிலையில் பாடுகிறாள்.

இப்படியொருநிலை எங்களுக்கும் ஏற்படக் கூடாது, ஜெனாலிக்கு வழிகாட்டியாக இருந்த அத்தை போல எமக்கு வழிகாட்டியாக பகவான் பாபா இருக்கிறாா். அவர் போதனைகளை நாம் இன்று செவிமடிக்காது பின்னால் பார்ப்போம் என்று இருந்தோமென்றால் ஜெனாலி போல அழ நேரிடும். அப்படிப் பட்ட விளைவுகள் எமக்கு ஏற்பட வேண்டாம்.

### எண்ணங்கள்

எமது எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றாக இருக்க வேண்டும். நீங்கள் அனைவரும் தூய்மையான, நேர்மையான, நல்ல தெய்வீக, புதுமையான எண்ணங்களை உருவாக்குங்கள். நாம் வாழ்க்கையில் வளம் பெற புதுமையான நல்ல எண்ணங்களை உருவாக்க வேண்டும்.

(தொடரும்)

# ஆசைகளைக் குறைத்து அன்பை வளருங்கள்

~ பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ~

**ஆத்ம சொருபிகளே..!**

பண்டிகை தினங்கள் மக்களுக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஊட்டுகின்றன. இந்த சங்கராந்தி பண்டிகை சூரியன் பயணிக்கும் பாதையைக் குறிக்கும் நாளாகும். சூரியன் இத்தினத்தில் மகர ராசியில் பிரவேசிக்கிறார். சூரியன் மகர ராசியில் பிரவேசிப்பது உத்தமமான தாகக் கருதப்படுகிறது. இப்படியான புனித நாட்களில் மனிதர்கள் புனிதமான உணர்வுகளை வளர்த்துக் கொள்ள முன்வர வேண்டும்.

மனிதன் தர்ம, அர்த்த, காம, மோட்சம் என்பவையே புருஷார்த்தங்கள், அவையே வாழ்க்கையின் இலட்சியம் என்று நினைக்கிறான். இல்லை தர்ம, அர்த்த காம, மோட்சம் மட்டுமே புருஷார்த்தம் ஆகாது. இந்த நான்குடன் சேர்த்து ஐந்தாவது புருஷார்த்தமும் உள்ளது. இது மோட்சத்தைக் காட்டிலும் முக்கியமானது. இதுவே "பரமப்பிரேமா" என்கிற எல்லாம் கடந்த உயர்ந்த அன்பு இதுவே தெய்வத்துவம். கடவுளும் அன்பும் வேறு வேறு கிடையாது. தெய்வமே அன்பு.

அன்பே கடவுள் இப படி உயர்ந்த அன்பு தத்துவத்தை உணர்ந்தவர் களால் மட்டுமே மனித குலத்தைப் பற்றிய அறிவைப் பெறமுடியும். அன்பும் கருணையும் வடிவமாய் நான் எனது என்கின்ற உணர்வுகளைக் கடந்த பிரேம மூர்த்தியே சாயி தேவன்.

அன்பைப் போற்றிப் பாதுகாத்து எல்லாவற்றையும் சமமாகப் பாவித்து மானவத்துவத்தின் மதிப்பை உயர்த்திய பிரேம மூர்த்தியே ஆத்ம தேவன். இப்படியான உயர்ந்த அன்பை வளர்த்துக் கொள்ள இப்புனித நாளில் மனிதர்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த அன்பை மனிதன் எப்படி வளர்த்துக் கொண்டிருகிறான் என்பதைப் பொறுத்தே அவனது நடத்தை அமைகிறது. அந்த நடத்தையே அவருக்கு சுவர்க்கத்தையும், நரகத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கிறது.

**தைப்பொங்கல் சிறப்புக் கட்டுரை**

மூன்றுபேர் ஒரு வீட்டில் அமைதியாகவும் ஒருவருக்கொருவர் அனுசரணையாகவும் அன்புடன் வாழ்ந்து வரும் போது அது உண்மையான சுவர்க்கம் ஆகிறது.

அதேவேளை இம் மூவரும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு ஒற்றுமையில்லாமல் வாழ நேரிட்டால் அது நரகத்தை விடக் கொடியது. இப்படியான அன்பை வளர்த்துக் கொள்ள முயல வேண்டும்.

இன்று உலகில் தாயோ, தந்தையோ, கணவனோ, மனைவியோ, நண்பனோ யாராயினும் சுயலாபம் கருதியே அன்பு செலுத்துகிறார்கள். இந்த உலகம் முழுவதும் தேடினாலும் சுயலாபம் கருதாத நண்பர்கள் யாரையும் காண முடியாது. அப்படி சுயநலம் இன்றி சுயலாபம் கருதாது அன்பு செய்யக் கூடியவர் கடவுள் மட்டுமே.

அவரே உயிரினும் இனிய நண்பன், அவர் எந்த பரிசிலையும் எதிர்பார்ப்பது இல்லை. அவருக்கு சுயநலமே கிடையாது. சுயநலம், சுயலாபம் கருதாது எந்தவித களங்கமோ கலப்போ இல்லாத முழு அன்புடன் விளங்குவது கடவுள் மட்டுமே. இப்படியான கடவுள் எங்கு வசிக்கிறார்.

அவர் உன் உடலில் ஆத்மாவாக வகிக்கிறார். இந்த ஆத்மாவே அன்பின் வடிவம். இந்த ஆத்மாவே அன்பின் வடிவம். இந்த அன்பில் தான் நீ வாழ வேண்டும். அதில் தான் உன் வாழ்க்கை நடைபெறும். அத்தகைய அன்பில் நீ திடமாக இருக்க வேண்டும். நிரந்தரமான இந்த அன்பை நீங்கள் பின்பற்றுங்கள். அதுவே ஆண்டவனின் கட்டளை.

இந்த கட்டளையைப் பின்பற்றி ராஜ வீதியில் நடக்கும் போது உங்கள் ஆசைகள் அனைத்தும் தானாகவே நிறைவேறுகின்றன. ஆனால் மனிதன் ஆசைகளை அதிகமாக வளர்த்துக் கொள்வதன் மூலம் பந்தங்களில் சிக்கி இந்த அன்பை வளர்த்துக் கொள்ள முடியாது தவிக்கிறான். ஆசைகளைக் கட்டுபடுத்துங்கள், குறையுங்கள் என்று கூறும் போது மனிதன் ஆசைகள் இல்லாத மனித வாழ்வு அர்த்த மற்றது என்று எண்ணுகிறான்.

ஆனால் உண்மையில் ஆசைகளைக் குறைப்பது என்றால் உங்கள் ஆசைகளில் மறைந்திருக்கும் சுயநலத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்பதாகும். உன் வியாபாரத்தை நீ செய், உன் உத்யோகம் எதுவோ அதற்குப்போ, உன் கடமையை நீ தவறாமல் செய், ஆனால் உன் எல்லாக் காரியத்தையும் பகவத்காரியமாகச் செய்யும் பாவனையை வளர்த்துக்கொள்.

ஸர்வகர்ம பகவத் ப்ரீதியார்த்தம் என்கிற உள்ளுணர்வு உனக்கு வர வேண்டும். இதுவே அன்பை வளர்த்துக் கொள்ள சுலபமான வழி. உண்மையில் இந்த உலகியல் எல்லாம் பகவானே செய்கிறார். கண்கள் பார்க்கின்றன, கண்களா பார்க்கின்றன...? இல்லை கண்களில் உள்ள திவ்ய சக்தியே பார்க்கிறது. அது போல் காதிலுள்ள திவ்ய சக்தியே கேட்கிறது.

எனவே மனிதனுள் உள்ள இந்த தெய்வீக சக்தி ஆத்தம சக்தியே மனிதனை இயக்குகிறது. இந்த சக்திதான் உன்னை நேர்வழியில் இட்டுச் செல்கிறது. இதை நீ உணர்ந்து கொண்டால் சிறிய சிறிய விஷயங்களில் கூட மனிதன் தன்னுள் உள்ள தெய்வத்துவத்தை உணர்ந்து கொள்ளமுடியும். இதே தெய்வத்துவமே அனைவரிடமும் உள்ளது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

இதைப் புரிந்து கொண்டு அனைவரிடமும் அன்பு செலுத்த வேண்டும். ஒவ்வொரு மனித ரூபமும் இறைவன் தரித்த வேஷமே. இந்த உலக நாடக அரங்கில் இறைவன் மனித உடல் தரித்து தன் கடமையை செய்து கொண்டே போகிறார். நான் தெய்வம் என்னுள் தெய்வத்துவம் உள்ளது என்கிற நம்பிக்கையை உருவாக்கிக் கொண்டால் உன் வாழ்வு தெய்வீகமாக மாறுகிறது.

என்றும் மாறாத குறையாத நிரந்தரமான அன்பு அன்பே கடவுள் Love is God Live in Love இந்த பிரேமதத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டும். இந்த அன்பைப் பெற முயற்சி செய்யுங்கள்.

என்ன செய்தாலும், என்ன நடந்தாலும் லாபமோ, நஷ்டமோ, இன்பமோ, துன்பமோ இதெல்லாம் என் நன்மைக்கே என் நன்மைக்கே என்ற எண்ணத்தை ஏற்படுத்திக் கொண்டால் இறைவனின் இடையறா அன்பு உங்களிடம் பெருகும்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஒவ்வொரு வினாடியும் புதிய வருடம் தான்

~ பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ~

அன்பின் வடிவங்களே!

மனிதனாகப் பிறப்பது இவ்வுலகியல் சுகங்களையும் பொருட்களையும் அனுபவிப பதற்காக மட்டும் அல்ல. இவ்வுலகில் நீங்கள் அனுபவிக் கும் எதுவும் திருப்தியளிக்கக் கூடியவையல்ல. பௌதீக உல கின் அனுபவங்கள் எல்லாம் உங்களது ஆசைகளை அதி கரிக்கச் செய்கின்றனவே தவிர வேறெதுவும் செய்வதில்லை.

ஆகவே ஒவ்வொரு வரும் ஆசைகளைக் கைவிட்டு தெய்வீகத் தத்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

உலகியலாகக் காணும்போது இன்று இந்த ஆண்டின் துவக்கமாக கருது கிறீர்கள். அந்த வருணனை அனைவருக்கும் பொருந்தக் கூடியது அல்ல ஒரு குறிப்பிட்ட காலண்டரைப் பயன்படுத்தும் சிலருக்கு மட்டும் இது பொருத் தமானதாக இருக்கும்.

இச்சமுதாயம் முழு மைக்கும் இது பொருந்தாது பிரபஞ்சம் என்பது தெய்வீகமே, தனிப்பட்ட வியத்தி, காலம், இடம் ஆகியவற்றுக்கு உட் பட்டவன் பிரபஞ்சத்துடன் அவனை ஒப்பிட முடியாது. ஆகவே தனிப்பட்ட மனிதன் ஜீவன் என்றால் இப்பிரபஞ்சம் தேவன். (தெய்வீகம்)

தெய்வீகத்தின் பார் வையில் வருடங்கள் என்பது ஒரு சிறு பொறி மட்டமே. கடந்த காலத்தில் இதைப் போன்று கோடிக்கணக்கான வருடங்கள் வந்து சென்று விட்டன. ஆகவே இன்றைய தினம் இந்த ஆண்டின் தொடக்கம் எனக் குறிப்பிடுவது முக்கியத்துவம் பெறுவதாக அமையவில்லை.

யேசு கிறிஸ்துவின் யுகம் கழிந்து 2000 ஆண்டு களாகின்றன. அவ்வாறெனில் கிறிஸ்து பிறப்பதற்கு முன் கடந்து சென்ற பல்லாயிரக் கணக்கான வருடங்கள் என்ன வாகிறது? மாதத்தின் பெயர்க ளான ஜனவரி, பெப்ரவரி என்பவையெல்லாம் கூட பண் டைய காலத்திய கிரேக்க மன்னர்களையும், பேறிவாளர் களையும் குறிப்பிடுவதாகவே அமைந்துள்ளன.

காலங்களுக்கு, மனி தர்களின் பெயரை வைத்திருக் கின்ற போதிலும் மனிதத் தன்மையும், மனித நேயமும் மறக்கப்படுகின்றன.

## தெய்வீகம்

மனிதன் தெய்வீகத் தின் வடிவம் Man (மாநவா) மூன்று எழுத்துக்கள்.

மா - அஞ்ஞானம்
ந - இல்லாமல்
வா - நடந்து கொள்வது

எனக் குறிப்பிடுகின்றன. ஆகவே மனிதன் என்பவன். அஞ்ஞானம் இன்றி நடந்து கொள்பவன், இதனை வேறு விதமாகவும் விளக்கலாம்.

மா - இல்லை
நவா - புதியது

அதாவது மனிதன் புதியவன் அல்ல. புராதனமானவன் நிரந் தரமானவன். எண்ணத் தொலை யாத வருடங்களாக இருந்து வருபவன் மனிதன்.

## நாட்கள்

நாட்களையும், தேதி களையும், பற்றிய சச்சரவுக்கு அர்த்தமேயில்லை. ஒவ்வொரு விநாடி பிறப்பதும், புதிய வருடம் பிறப்பது எனத்தான் கொள்ளவேண்டும். வினாடிகள், நிமிடங்களாக, நிமிடங்கள் மணிகளாக இவ்வாறாக வருட மாகிறது. உங்களது வாழ்க் கையின் ஒவ்வொரு விநாடியும் புதியதுதான். ஆகவே வருடம் முடிவதற்கும, பிறப்பதற்கும் எனப் பிரத்யேகமாகப் புனிதம் எதுவும் இல்லை.

இந்த நாளைப் பற்றிச் சிலர் பலவிதமாக, விஷேச முக்கியத்துவம் வாய்ந்ததாகக் குறிப்பிடுகின்றார். அசாதரண மான, பயங்கரமான ஏதோ நிகழ்ச்சிகள் நடக்க இருப்ப தாக ஆருடம் சொல்கிறார்கள். நேரமோ, தேதியோ எதுவுமே உங்களது மகிழ்ச்சிக்கும், துயரத்திற்கும் காரணமில்லை உங்களுடைய முந் தைய கர்மாக்கள் தான் மகிழ்ச்சிக்கும் துன்பத்திற்கும் காரணம். எதை விதைக்கிறீர் களோ அதையே அறுவடை செய்கிறீர்கள். இது நடக்கப் போகிறது அது நடக்கப் போகிறது என்ற ஆருடங்களில் நேரத்தையும், உங்கள் மனத்தின் சக்தியையும் வீணாக்காதீர்கள்.

நீங்கள் புதிதாகப் பிறந்த குழந்தையாக இருக் கும் போது உங்களது கழுத் தைச் சுற்றி எந்த அணிகலனும் கிடையாது. முத்துமாலையோ, தங்கச் சங்கிலியோ, வைர நெக்லேஸோ எதுவும் இல்லை. ஆனால் உங்களது கழுத தைச் சுற்றிகனமான ஒரு சங்கிலி இருக்கிறது. உங்களது செயல்களை நல்லவை, தீயவை என ஒவ்வொன்றாக எண்ணி எண்ணிக் கோர்த்து பிரம்மா வால் அணிவிக்கப்பட்ட மாலை உங்களது கழுத்தில் ஆ'ரண மாய் விளங்குகிறது.

அன்பின் வடிவங்களே...!

நீங்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் சரியானதாகவும், தூயதாகவும் இருக்கும்போது உங்களுக்கு நல்ல விளைவுகள் தான் ஏற்படும்.

*தொகுப்பு:*
*திருமதி வ. பத்மினி*
*ச. சா. தை 2000*

## ஆசைகளைக் குறைத்து அன்பை வளருங்கள்..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அன்பு சாயி யின் சன்னிதியில் இருக்கும் போது உங்களிடம் பரிபூரண மாக நிறைந்து மன ஆனந்த மாயிருக்கிறது. பின்பு வெளி உலகத்திற்குச் சென்ற பிறகு இந்த அன்புப் பெருக்கம் குறைந்து விடுகிறது. இதற்குக் காரணம் நீங்கள் போகும் சூழல் உலகியல் விஷயங் களால் நிரம்பியிருப்பதால் நீங்கள் அவற்றால் ஈர்க்கப்பட்டு இந்த அன்பு குறைந்து விடுகிறது.

இதனால் தான் சுவாமி நீங்கள் உங்கள் உள்ளேயும், வெளியேயும் இந்த தெய்வீக சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும். என்று கூறுகிறார். அன்பே உங்கள் வடிவம். அதனால் அந்த அன்பை வெளிப்படுத்துங்கள். உங்கள் அன்பை பத்து பேருடனாவது பகிர்ந்து கொள்ளுங்கள்.

இறைவன் அவர், ஹ்ருதயவாசி சத்தியமே பகவத்ஸ்வருபம், தர்மமே பகவத்ஸ்வருபம், பிரேமையே பகவத்ஸ்வரும், மனிதனின் மனத்தினின்று வெளிப்பட். முதல் உணர்வே அன்புதான். அந்த அன்பு பிறந்த பிறகு தான் மற்றவை அனைத்தும் பிறந்தன.

குழந்தை பிறந்த உடனேயே தாயின் மேல் அன்பு செலுத்தத் தொடங்கு கிறது. இப்படியான பிரே மையை வளர்த்துக் கொள்ள உங்கள் மனத்தை விசால மானதாக மாற்றிக் கொள் ளுங்கள். இப்படிப்பட்ட அன் பைப் பெருக்கி வளர்ந்துக் கொள்ளும் இப்புனித தைப்பொங்கல் தினத்தில் உறுதி எடுத்துக் கொள்ளுங் கள்.

(ச.சா. 1995 மாசி)

தொகுப்பு: Dr. சிவராணி சிவசோதி



# பகவான் பாபாவுடன் எனது அனுபவங்கள்

**கடந்த மாதம் ஒரு சாயி அன்பர் லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தார். அப்போது சுவாமியுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பக்திப் பரவசத்துடன் எடுத்துரைத்தார். அவற்றையே இங்கு தொகுத்துத் தருகிறோம்.**

*- சாயிப்பிரியா*

### தேனீர் குடிப்பதற்காக

நான் முதல் முதலில் புட்டபர்த்திக்கு போகும் சந்தர்ப்பம் குருபூர்ணிமா அன்று கிடைத்தது. அந்த நேரத்தில் எனக்கு ஒரு பழக்கம் ஒரு நாளைக்கு 20 தடவையாவது தேனீர் (Tea) குடிப்பது. சுவாமியே எல்லாம் என்று நான் எந்த ·மருந்துவகைகளோ அல்லது ஊசியோ பேடுவதே இல்லை. ஆனால் இந்த ஒரு பழக்கம் இருந்தது.

எனவே சென்னைக்கு வந்து இறங்கியவுடன் (Tea) தேனீர் குடிக்க வேண்டும் போல இருந்தது. நான் உடனேயே (Tea) குடிக்க அவசரப்பட்டேன். ஆனால் என்னுடன் வந்தவர்கள்

"நீங்கள், மருந்துகள், ஊசிகளும் பாவிப்பதில்லை கண்டகண்ட இடங்களில் சாப்பிடவோ குடிக்கவோ வேண்டாம்" என்று சொல்லி விட்டார்கள். "எங்காவது 5 நட்சத்திர ஹோட்டல்களில் குடிக்கலாம்.".. என்று இன்னுமொருவர் சொன்னார்.

மற்றவர் சொன்னார் "வேண்டாம் புட்டபர்த்திக்கு போனபின் குடிக்கலாம் அங்கு தூய்மையானதும் பகவானால் ஆசீர்வதிக்கப்பட்டதும்" என்று அது எனக்கு சரியாகப்பட்டது. சட்டென டாக்சியை பிடித்துக் கொண்டு புட்டபர்த்தியை அடைந்தோம்.

"முதலில் கன்டீனுக்கு போவோம் பின் தரிசனத்துக்குப் போகலாம்" என்றேன்.

இல்லை... சுவாமி வருவதற்கான மியூசிக் போடடாகி விட்டது. கன்டீனும் முடிவிடுவார்கள். முதலில் சுவாமி பின் தேனீர் (Tea) என என்னுடன் வந்தவர்கள் என்னை இழுத்துக் கொண்டு வந்து தரிசன லைனில் இருத்தி விட்டார்.

உண்மையில் எனக்கு இது முதல் தடவை என்றபடியால் புட்டபர்த்தி நடைமுறைகள் விளங்க வில்லை.

"ஐயோ..(Tea)யை" "மிஸ் பண்ணி விட்டேனே" என்று கவலைப்பட்டுக்கொண்டு இருந்தேன் பெருவாரியான சனங்கள் சுற்றிச் சுற்றி சனங்களைப் பார்த்தே நான் பிரமித்துப் போனேன். சுவாமி வந்தார். குருபூர்ணிமா அருள் உரை தொடங்கியது.

### ஆத்ம சொரூபிகளே..!

கனடா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, லண்டன் என்று உலகம் முழுவதும் இருந்து நீங்கள் வந்திருக்கிறீர்கள். பார்க்க மிகவும் சந்தோசமாக இருக்கிறது. எதற்காக வந்திருக்கிறீர்கள்...? ஆத்மீக வளர்ச்சி அடையவேண்டும் என்று மிகவும் ஆவலாக வந்திருக்கிறீர்கள்... ஆனால் சில பேர் எதற்காக வருகிறார்கள்? Tea & Coffee குடிக்க வருகிறார்கள். என்று சுவாமி சொன்னதும் நான் திடுக்கிட்டு விட்டேன். என்ன செய்வது என்று தெரியாமல் தலைக்கு மேல் கையை உயர்த்தி வணங்கியபடி,

"சுவாமி..! இன்றிலிருந்து நான் (Tea) தேனீர் கோப்பியை விட்டு விடுகிறேன்... இது சத்யம்.." என்று சொல்லி விட்டேன், எனக்கு அருகில் என்னுடன் வந்த குமரன் என்ற இளைஞர். இடுப்பில் மெதுவாக நிள்ளி

"சேர்.. இப்படி சத்யம் செய்கிறீர்களே.. மெதுவாக விடலாம். இப்படியெல்லாம் சொல்லாதீர்கள் திடீரென விடுவது கூட உடம்புக்கு கூடாது" என்று மன்றாடினான்.

சுவாமி அடுத்தவசனம் சொன்னார்.

"அதிக தேனீர், கோப்பி குடிப்பது உடலுக்கு கூடாது. இது ஞாபகசத்தியைக் குறைக்கும் ஒருநாளைக்கு ஒன்று இரண்டு (Tea) பரவாயில்லை" என்று சொன்னார்.

ஆனால் நான் சுவாமியிடம் "ஸ்வாமி" நான் வாக்குத்தந்துவிட்டேன் அதைக் காப்பாற்றும் வழிவகைகளையும் சக்தியையும் நீங்களே தர வேண்டும் என்று பிரார்த்தனை செய்தேன்.

### ஏழைகளுக்கு உணவு அளித்தார்

பகவானின் அருளால் நான் புட்டபர்த்திக்கு அடிக்கடி சென்று வருவேன். சுவாமி ஒருமுறை ஏழைகளுக்கு நாராயண சேவையாக உணவு பரிமாறிக்கொண்டு இருந்தார். எங்களுக்கு சுவாமியின் கைகளினால் தரப்பட்ட உணவு சாப்பிடவேண்டும் என்று ஆசை அந்த ஏழைகளின் கியூவில் நாங்களும் போய் அமர்ந்து விட்டோம்.

எனக்கு உணவு போடும் நேரம் வந்தது. சுவாமி ஒருகரண்டி சோறு என் இலையில் போட்டார். அடுத்த கரண்டி போடுவதற்காக அவர் குனிந்த போது நான் சந்தோசத்தில் உணவு உண்ணும் முன் சொல்லப்படும் ப்ரம்மார்ப்பண மந்திரத்தை சொல்லத் தொடங்கினேன்.

ஓம்....ஓம்....ஓம்... எனத் தொடங்கி

ப்ரம்மார்ப்பணம் ப்ரம ஹவிர் ப்ரமார்ப்....

என்று பாடத்தொடங்கினேன் உடனே சுவாமி என் தலையில் ஒரு தட்டு தட்டி விட்டு,

என்ன பிரச்சனை...? என்று கேட்டார்.

சுவாமி.... நான் உணவு உண்ணும் முன் சொல்லும் ப்ரம்மார்ப்பண மந்திரம் சொல்கிறேன் சுவாமி...

ஓ... அப்படியா...இந்த உணவு மந்திரம் எதற்காகச் சொல்கிறது என்று கேட்டார்.

உணவை தூய்மைப் படுத்துவதற்காக சுவாமி...! என்றேன் நான்!

ஓ...! அப்படியா...? பைத்தியக்கார சுவாமி தந்த உணவில் சுத்திகரிக்க, தூய்மையாக்க என்ன இருக்கிறது... என்று கேட்டார்.

சுவாமி... ச்சா...சா....சா... என்று கூறிக்கொண்டு போனார்.

இந்தச் சம்பவத்தில் இருந்து இரண்டு விடயங்களை சுவாமி தெளிவாக்குகிறார். ஒன்று தான் கடவுள் என்பதையும், இரண்டாவது தெய்வத்துக்கு அருகாமையில் செல்வதற்குத்தான், இந்த மந்திரங்கள், வழிபாடுகள், கிரிகைகள் எல்லாம் இறைவனுக்கு அருகாமையில் சென்றபின் எமக்கு எதுவுமே தேவையில்லை.

### பாத்திரங்கள் கழுவ வேண்டும்

சுவாமியுடன் பேசிக்கொண்டு இருக்கும்போது ஒருமுறை அவர் சொன்னார் "இதுதான் உன் கடைசிப் பிறவி." என்று நான் மிக ஆனந்தமாக இனி இந்தப் பிறவி என்ற பெருங்கடலில் வந்து மூழ்கி திக்குமுக்காடத் தேவையில்லை. சுவாமிதான் சொல்லிவிட்டாரே இனி உனக்கு பிறவியில்லை என்று என சந்தோஷமாக இருந்தேன்.

(தொடரும்)

**அன்பை இறைவனிடம் இருந்து பெற்றதும் இவ்வுலகத்தையே வென்று விடலாம் ~ பாபா**

# இளைஞர்களிடையே ஆன்மீக சாதனையும் விளைவுகளும்

**1வது பரிசு பெற்ற கவிதை**

இளைஞரே எழுந்திரும் இங்கு - உம்மால்
இயன்றதை செய்திடும் வந்து!
இலக்கினை நன்மையாய் (க்) கொண்டு - இங்கு
இயங்கினால் வாழ்வீரே வென்று!

ஆன்மீக சாதனை புரிந்து - உன்
ஆன்மாவின் ஆற்றலை அறிந்து;
வாழ்ந்திடு பாரினில் உயர்ந்து! - அதனால்
வையகம் வளர்ந்திடும் பரந்து!!

பஜனையால் பக்குவப் பட்டு - (உ) மும்
மலங்களை இறுக்கமாய் கட்டு!
தெய்வீக இசையினைப் பெற்று - இந்தத்
தேசத்தில் நன்மையைக் கொட்டு!!

மனதினை ஒருநிலை படுத்து - அதனுள்
மறைந்துள்ள வினைகளை விடுத்து!
மந்திரம் ஜெபியடா தொடுத்து - உன்
மனதுக்கு சாந்தியைக் கொடுத்து!!

காலையும் மாலையும் வணங்கு - எங்கள்
கடவுளின் வழியினில் இணங்கு!
அன்பின் தாளத்தை உணர்ந்து - உன்னை
அழகாக்கு; "ஆன்மீகம்" கொணர்ந்து!!

ஆன்மா வயப்படும் எதனால்? - அது
ஆன்மீக சாதனை அதனால்!!
சாதனை புரிந்திடு இதனால் - உன்னுள்
சாந்தி ஏற்படு வதனால்!!

மனதினில் திருப்தியா வேண்டும்? - நல்ல
மகிழ்வுகொள் இதயமா வேண்டும்?
"அனைத்தையும்" உணரா வேண்டும்? - அதற்கு
ஆன்மீக சாதனை வேண்டும்!!!

ஆன்மீகம் அதனுடன் வாழ்ந்து - துயர்
துன்பங்கள் அதனிலே மீழ்ந்து;
இறைஇயல் இன்பத்துள் வீழ்ந்து - இளைஞர்
எல்லோரும் வாருங்கள் சேர்ந்து!

ஆன்மீக சாதனை கொண்டால் - அந்த
அமுதத்தை அள்ளி நீர் உண்டால்;
வாழ்விலே உய்வொன்று உண்டு! - என்று
கூறினேன் கவிதையில் கண்டு!!!

*************

**தி. திருமயூரன்**
நல்லூர்

*கடந்த வருடம் 12-10-2002 அன்று நடைபெற்ற இளைஞர்தின விழாவின் போது இடம் பெற்ற "இளைஞர்களிடையே ஆன்மீக சாதனையும் விளைவுகளும்" கவிதைப் போட்டியில் 1வது பரிசு பெற்ற கவிதை இங்கு பிரசுரமாகின்றது.*

## சுவாமியின் வழியில் நாமும்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணங்கள் தான் மனிதன் எண்ணங்களால் தான் மனிதன் உருவாக்கப்படுகிறான். இந்த விலங் கினங்களில் மனிதனும் ஒருவர் ஆனால் மற்ற விலங்குகளுக்கு கிடைக்காத ஒரு பேறு மனித இனத் துக்குக் கிடைத்திருக்கிறது. அதுதான் அவனுடைய எண்ணங்கள்.

ஒருவனுடைய எண்ணம் போலவே அவனுடைய வாழ்வு அமை கிறது. பைபிளும் இதைத் தான் கூறுகிறது.

"உன்னுடைய எண்ணம் போலவே உன்னுடைய வாழ்வு" என்று

ஆகவே எங்களுடைய எண்ணங்கள் சீராக இருக்க வேண் டும் சீரான நல்ல எண்ணங்கள் நல்லோருடைய தொடர்பினால்தான் ஏற்படும். இதற்கு உதாரணமாக மகாபாரதத்தில் இருந்து ஒரு சம்பவம்.

துரியோதனனும் தருமரும் விற்பயிற்சிக்காக காட்டுக்குச் சென்றுவிட்டு திரும்பி நாட்டை நோக்கி வருகின்றனர். திடீர் என தருமர் நினைக்கிறார். நான் இந்த நாட்டை அரசாளப்போகிறவன் அத னால் பாதத்தை நிலத்தில் பதித்தே நடப்போம் என்று இரதத்தை விட்டு இறங்கி நடக்கிறார். துரியோத னனும் அவ்வாறே நினைத்து தானும் இறங்கி நடக்கின்றார்.

அவ்வாறு நடக்கும்போது வழியில் தருமர் ஓர் இறைச்சிக் கடையைப் பார்க்கிறார் அவருடைய மனதில் அவனைப் பற்றிய தீய சிந்தனைகள் எழுகின்றன. ஏன் இவ்வாறு செய்கிறான் இவனுக்கு இரக்கம் இல்லையா? இவனுக்கு எவ்வளவு மிருகக் குணம் என்று நினைக்கிறார்.

ஆனால் திரும்பப் பார்க்கும் போது அந்த வியாபாரி தான் வெட்டும் இறைச்சியில் ஒரு பகுதியைக் கூரையிலும், ஒரு பகுதியை வீதியிலும் போடுகின் றான். கூரையில் போட்டதை பறவைகளும், வீதியில் போட்ட வற்றை நாயும் உண்கின்றன. அப்போது தருமர்,

இவன் தான் செய்யும் தொழிலில் தர்மத்தைக் கடைப் பிடிக்கின்றானே. இதை நான் பிழை யாகப் புரிந்து கொண்டேனே ஏன் என்னிடம் தீய எண்ணம் தோன்றியது என்று கலங்கினான்.

அரண்மனைக்குச் சென்ற வர் நேரே கிருஷ்ணரிடம் சென்று தன் நிலைக்கான காரணத்தை வினா வினார்.

கிருஷ்ணர் கேட்டார் நீ யாருடன் வந்தாய் என்று. தருமர் தான் துரியோதனனுடன் வந்ததாகக் கூறுகிறார்.

பார்த்தியா நீ தீய எண்ணம் உள்ளவருடன் வந்தமையால் உன்னுள்ளும் அந்த உணர்வு ஏற்பட்டது என்றார். ஆகவே நாமும் நல்லவருடன் சேர்ந்து நல்ல உணர்வை வளர்க்க வேண்டும்.

***

# சிறுவர் பூங்கா

**எனதன்பான சிறுவர்களே!**

*எனது அன்பையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளுங்கள் உங்களுடைய அனைத்தையும் சாயி கிருஷ்ணாவுக்கே அன்புடன் அளித்து விடுங்கள் தீச்சுவாலையுள் சென்று விழும் ஈசல் போல அனைத்தையுமே சாயியிடம் கொடுத்துவிட்டு அவருடன் சங்கமித்து விடுங்கள். பிரச்சினைகள் அனைத்தையும் அப்போது நீங்கள் தாண்டிச் சென்று விடுவீர்கள். அவரே சத்யம். வாழ்க்கையோர் போலி விளையாட்டு.*

*- உங்கள் அன்பு பாபா*

## அன்பைப் போற்றிடுவோம்

அன்பே தெய்வமெனப் போற்றிடுவோம்
அன்பு வடிவமாக எம்மை மாற்றிடுவோம்
அன்போடே நாளினைத் தொடங்கிடுவோம்
அன்போடு நாளினைச் செலவிடுவோம்
அன்பினை உலகில் பரப்பிடுவோம்
அன்பினால் நாளினை நிரப்பிடுவோம்
அன்புக்கு நிகரே இல்லை என்போம்
அன்பினால் ஒற்றுமையை பேணிடுவோம்
அன்புடன் கண்களால் பார்த்திடுவோம்
அன்புடன் காதுகளால் கேட்டிடுவோம்
அன்புடன் கரங்களால் கருமங்கள் ஆற்றிடுவோம்
அன்பான எண்ணங்களை எண்ணிடுவோம்
அன்பான வார்த்தைகளைப் பேசிடுவோம்
அன்பினால் நாளினை நிறைவு செய்வோம்
இதுவே இறைவனை அடையும் வழி என்போம்.

***ஆக்கம்: வத்ஸலா***

## ஆறுமுகக் கடவுள்

ஆறுமுகக் கடவுள் முருகனே
எனக்கு அருள் செய்வாயே
ஆனைமுகன் தம்பி கந்தனே
எங்களை மன்னித் தருள்வாயே

கருணை முகப் பார்வையால்
காத்து அருள் புரிவாயே
மயிலின் மேல் ஏறியே
மனதில் இன்பம் தருவாயே.

***கிருஸ்ணசாமி கஸ்தனி***
**ஆண்டு 9 மானிப்பாய் மகளிர் கல்லூரி**

## விநாயகர்

ஓங்கார ரூபமே விநாயகனே
ஞான முதல்வனே விநாயகனே
வெற்றியைத் தந்திடும் விநாயகனே
வேண்டுவோர் வேண்டிடும் விநாயகனே.

சித்தியை நல்கிடும் சித்தி விநாயகனே
சிவசக்தி மைந்தனே விநாயகனே
நல்லவை அருளிடும் விநாயகனே
ஆனைமுகக் கடவுளே விநாயகனே.

அவ்வைக்கு அருளிய விநாயகனே
ஐந்து கரனே விநாயகனே
மோதகப் பிரியனே விநாயகனே
எலியின் மீது வலம் வரும் விநாயகனே.

## தூய்மை

1. தூய்மையிருக்கும் இடத்திலே கடவுள் இருப்பார்.
2. அறையை எப்போதும் தூய்மையாக வைத்திரு.
3. மேசை நாற்காலிகளைக் கவனத்துடன் பயன்படுத்து.
4. வெளியிலிருந்து வீடுதிரும்பியதும் முகம், கை, கால் இவற்றை கழுவு.
5. பொருட்கள் கீழே விழுந்து உடையாமல் பார்த்துக்கொள்.
6. புத்தகங்களையும், பையையும் குறித்த இடத்தில் வை.
7. தினமும் கடவுளை வணங்கு.

*தொகுப்பு: கி. கல்கிராஜ்*
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

## கடவுளை வணங்கு

ஒரு ஊரில் இருநண்பர்கள் இருந்தனர் அவர்கள் இருவரும் பரீட்சைக்காகப் படித்தனர். அவர்களில் ஒருவன் குமுதன். அவன் தெய்வபக்தி உள்ளவன் மற்றவன் அமுதன். அவன் தெய்வ பக்தி இல்லாதவன்.

இருவருக்கும் பரீட்சை நெருங்கியது. இருவரும் ஆலயத்திற்குச் சென்றனர். அப்பொழுது அமுதன் குமுதனை "நீ கோவிலுக்குச் சென்று விட்டுவா" என்று கூறினான். குமுதன் ஆலயத்திற்குச் சென்றான்.

அமுதன் கோவில் வீதியிலுள்ள மணலை கிளறி விளையாடிக்கொண்டிருந்தான் அப்பொழுது அவனுக்கு 5ரூபா நாணயம் ஒன்று கிடைத்தது.

அந்நேரம் குமுதன் வந்நான். அவன்காலில் சிறிய கல்அடித்துவிட்டது. அப்பொழுது அமுதன் சொன்னான்.

குமுதா நீ கோயிலுக்குச் சென்றதால் காயம். நான் வெளில் நின்றதால் 5ரூபா என்றான்.

அப்பொழுது அந்த வீதியில் ஒரு சாஸ்திரியார் வந்தார். அந்த சாஸ்திரியார் இருவருடைய கைரேகளையும் பார்த்தார். முதலில் குமுதனுக்குப் பார்த்தார்.

"இன்று உனக்கு பெரிய வாகன விபத்தொன்று நடந்திருக்கும் கடவுளை வணங்கியபடியால் உன்காயம் சிறிதாகிவிட்டது" என்றார். அடுத்தாற்போல் அமுதனுக்குப் பார்த்தார். "உனக்கு இன்று வங்கியில் 5லட்சம் ரூபா கிடைத்திருக்க வேண்டியது நீ இறைவனை வணங்காதபடியால் உனக்கு 5ரூபா கிடைத்தது" என்றார்.

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று.**

*க. உஷாந்தன்*
தரம் 6
யாழ். இந்துக் கல்லூரி

# இறைவனின் ஆணையில் நம்பிக்கை வையுங்கள்

யேசுநாதர் ஒருதீவின் மக்களைப் பார்த்து இத் தீவில் பெருவெள்ளமும், புயலும் வந்து அழிக்கப் போகிறது ஆகவே நீங்கள் பெரிய ஓடம் ஒன்றை தயாரியுங்கள் அவ் வேளையில் தப்புவதற்கு என்று தம் சீடர்களுக்குக் கட்டளை யிட்டார்.

இறைவனின் ஆணை யின் மேல் நம்பிக்கையுள்ள சீடர்கள் ஓடத்தை கட்டும் பணி யில் ஈடுபட்டதுடன் அத்தீவின் மக்கள் அனைவருக்கும் அச் செய்தியைச் சொல்லி இந்த ஓடம் நாம் எல்லோரும் தப்பு வதற்காக இறைவனின் ஆணையின்படி கட்டப்படுகிறது. இறைவன் மேல் நம்பிக்கை உள்ளவர்கள் இந்தப் பணிக்கு உதவும்படியும் கேட்டுக் கொண்டனர்.

ஆனால் சொற்ப எண் ணிக்கையான மக்களே அதனை நம்பி உதவி செய்த னர். ஓடம் கட்டி முடிந்து விட் டது. இறைவன் சொன்னபடி அத்தீவில் மழை பெய்யத் தொடங்கி வெள்ளப் பெருக்கும் புயலும் ஆரம்பித்து விட்டது. அந்த ஓடத்தில் உள்ள இறை வனின் சீடர்கள் மக்கள் எல் லோருக்கும் அழைப்பு விடுத்த னர்.

"இறைவனின் ஆணைப்படி இவ் ஓடம் சரிக் கட்டப்பட்டது இந்த அபாயத்தில் இருந்து எம்மைக் காப்பதற்காக இறை வனின் ஆணையில் நம்பிக்கை வைத்து எல்லோரும் ஏறுங் கள் இந்த ஓடத்தில் நாம் தப்பி வேறு ஓர் தீவுக்கு போய் விட லாம்." என பல தடவை அழைப்பு விடுத்தனர்.

ஆனால் அத்தீவில் உள்ள மக்களில் ஓர் சொற்ப எண்ணிக்கையான மக்களே ஓடத்தில் ஏறினர். ஆனால் அத்தீவில் உள்ள மிருகங்கள், பறவைகள் எல்லாம் ஓடிவந்த அந்த ஓடத்தில் ஏறிவிட்டன. அப்போது இறைவனின் சீடர்கள் மக்களுக்கு திரும்பவும் அழைப்பு விடுத்தனர்.

பார்த்தீர்களா மனி தரை விட் விலங்குகள், பறவைகள் எல்லாம் இறைவன் மேல் முழு நம்பிக்கையுடன் வாழ்கின்றன ஆதனால் இறைவனின் ஆணையின் மேல் நம்பிக்கை கொண்டு இவ் ஓடத்தில் ஏறிவிட்டன. ஆனால் மனிதர்களாகிய நீங்கள் நித்தியமான இறைவனின் ஆணைமேல் நம்பிக்கை வையாது நிலையில்லாத சொத்துக்ள், உற்றார், உறவி னர், செல்வங்கள், எல்லாம் நிலையானது என நம்பிக்கை வைத்துள்ளீர்கள் அதனால் நீங்கள் ஆபத்தில் அகப்பட்டு அழிவை அடைகிறீர்கள்.

ஆனால் இறைவனின் ஆணையின் மேல் முழு நம்பிக்கை வைத்தவர்கள் இவ் ஓடத்தின் மூலம் ஆபத்தில் இருந்து காப்பாற்றப்பட்டுள் ளார்கள். விலங்கினங்கள் கூட நம்பிக்கை வைத்தன. ஆனால் மனிதர்களுக்கு சந்தேகம் என் னும் தீய சக்தி குடி கொண்ட தால் இறைவன் மேல் நம் பிக்கை வைக்க முடியவில்லை.

"வாழ்க்கை என்பது நம்பிக்கை என்னும் இன்பமான ஓடம் அதில் சந்தேகம் என்னும் துவாரம் அரிக்காமல் இறைவன் மேல் நம்பிக்கை வைப்பாயாக"!!.

# நம்புங்கள் அல்லா எம்முடன் இருக்கிறார்

முகம்மது நபிகள் நாயகம் அவர் களின் பிரசாரத் தால் மக்கள் வழி தவறிப் போகிறார்கள் என்று அரேபிய நாட்டு அரசன் கருதியதால் அவரை பிடித்துவரும்படி அரசன் தன் படைகளை மக்காவுக்கு அனுப்பினார்.

அதனை அறிந்த முகம்மது நபிகள் நாயகம் அவர்கள் தனது சீடன் அபூபக்கருடன் மதீனாவுக்கு தப்பி ஓடினார்.

ஓடும் வழியில் படைகள் சுற்றி வருவதை கண்டதும் ஓர் கற்குகைக்குள் இருவரும் ஒழித்து இருந்தனர். அப்போது அபூபக்கர் அவர்கள் நபிகள்நாயகம் அவர்களைப் பார்த்து.

"நாம் இருவர் படை களோ ஆயிரம் எப்படி தப்பிக் கப் போகிறோம்" என்று கேட்டார்.

அதற்கு நபிகள் நாயகம் அவர்கள் சொன்னார் நாம் இருவர் அல்ல . நாம் மூவர் இங்கு இருக்கிறோம். எம்மோடு அல்லா (இறைவன்) இருக்கிறார் என்ற நம்பிக கையை இழந்து விட்டாயா? எம்மோடு இறைவன் இருக்கி றார் என்ற நம்பிக்கையுடன் இரு. எங்களை எத்தனை ஆயிரம் படை வந்தாலும் பிடிக்க முடியாதென்ற நம்பிக்கையுடன் இரு என்றார்.

அதே நம்பிக்கையுடன் இருந்து படைகளிடம் இருந்து தப்பித்து மதீனா நகர் சென்று அங்கு தமது பிரசாரத்தை மேற்கொண்டு வெற்றியையும் கண்டார். அதற்குக் காரணம் எந்த நேரமும் எம்முடன் இறைவன் வருகிறான் என்ற தளராத நம்பிக்னையயே.

**கடந்த மாதம் மானிப்பாய் சத்யசாயி நிலைய மண்டபத்தில் திரு. ரவி அவர்கள் பஜனையின் பின் ஆற்றிய உரையில் இருந்து தொகுக்கப்பட்ட கதைகளே இங்கு பிரசுரமாகிறது.**

# தளராத நம்பிக்கை வேண்டும்....

முன்பு ஓர் கிருஷ்ண பக்தன் இருந்தான். அவன் தளராத நம்பிக்கையுடன் கிருஷ்ணனுடைய நாமத்தைச் சொன்னபடியே தனது கடமைகளைச் செய்து வருவான். எங்கு செல்லும் போதும் அவன் கிருஷ்ண னுடைய நாமத்தை சொல்லிக் கொண்டே போவான் அவ னுக்கு கிருஷ்ணர் அருளும் காட்டியுள்ளார்.

ஒருநாள் அந்தக் கிருஷ்ண பக்தன் ஓர் ஆற் றைக் கடந்து சென்ற சமயம், அந்த ஆற்றில் துணிகள் துவைத்துக் கொண்டு நின்ற வர்கள் அவனை போகவேண் டாம் என மறித்து அவனை தாக்கினர். அவன் கிருஷ்ணா, கிருஷ்ணா என்று கத்தினான்.

அச்சமயம் கிருஷ்ணர் சயனத்தில் இருந்தவர் திடீரென எழுந்து வந்தார். ஆனால் உடனே திரும்பி வந்து கிருஷ்ணன் படுத்துவிட்டார். லஷ்மி உடனே கேட்டார்,

"ஏன் வெளிக்கிட்டு போனீர் கள் பின் போகாமல் திரும்பி விட்டீர்கள்" என்று. அதற்கு கிருஷ்ணர் சொன்னார்,

"இது வரை என்மேல் நம்பிக்கை வைத்திருந்த பக் தன் என்மேல் நம்பிக்கை இழந்து தன்மேல் நம்பிக்கை வைத்துவிட்டான். என்று அதா வது கிருஷ்ணா கிருஷ்ணா என்று கத்தின பக்தன் அந்த நாம உச்சரிப்பை நிறுத்திவிட்டு தன்னை தாக்கியவர்களுடன் தான் திரும்பத் தாக்கி அடிபட்டான்.

இதுவரை கிருஸ்ணர் நாமத்தை சொன்னவன் அதனை மறந்து தன்மீது நம்பிக்கை கொண்டு அடிபடத் தொடங் கியதால் அவன் கிருஸ்ண பரமாத்மாவின் அருளையும் பாதுகாப்பையும் இழந்தான்.

ஆகவே எமக்கு எந் தத் துன்பமோ சோதனையோ வந்தாலும் நாம் தெய்வத்தின் மீது தளராத நம்பிக்கை வைத் தால் தெய்வம் எம்மைக் காப் பாற்றும் என்ற நம்பிக்கை எமக்கு திடமாக இருக்க வேண்டும். அப்படியான நம் பிக்கை இருந்தால் தான் தெய் வத்தின் அருள் எமக்குக் கிடைக்கும்.

**நமது எண்ணங்கள் தெய்வீகமாக இருக்கும்போது எமது சொற்களும் இனிமையாக இருக்கும் ~ பாபா**



# பகவத் கீதா அறிமுகம்

(ஆசிரியருக்கு மட்டும்)

உபநிஷதங்களின் சாரமே பகவத் கீதையாகும். இதில் வேதாந்தத்தத்துவங்கள் புரியக்கூடிய எளிய முறையில் கூறப்படுகின்றது. உபநிஷதங்கள் பசு எனில் கீதை பாலாகும். கீதையைப் படித்து புரிந்து கொண்ட ஒருவன் உபநிஷதங்களின் போதனையைப் புரிந்து கொண்டவனாவான்.

பவத் கீதையில் 18 அத்தியாயங்களும், 700 ஸ்லோகங்களும் உள்ளன. மகாபாரத இதிகாசத்தின் இதயமாகக் கீதை விளங்குகிறது.

உலகியல் ரீதியான கடமையில் ஒருவனின் மனப்பாங்கு எங்ஙனம் இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக, கீதையிலே கிருஷ்ணன் திகழ்கிறார். அவர் உலகை ஒரு விளையாட்டு மைதானமாகக் காண்கிறார். இங்கு வாழ்க்கை என்பது விளையாட்டு, ஸ்ரீ கிருஷ்ணரின் பிள்ளைப் பராயத்துத் தூய்மையான விளையாட்டுகள் யாவும் இத்தகைய மனப்பாங்கையே எடுத்துக் காட்டுகின்றன. விளையாட்டு வீரன் ஒருவன் மைதானத்துக்குள் எத்தகைய உணர்வுடன் நுழைகிறானோ, அதே மனப்பாங்குடன் தான் ஒருவன் வாழ்க்கையினுள்ளும் புகவேண்டும். என எதிர்பார்க்கப் படுகிறது. எதையும் சமனாக (வெற்றி தோல்வி) காணும் போது உலகம் ஒரு மகிழ்ச்சி நிறைந்த உல்லாச புரியாக இருக்கும். ஆனால் வாழ்க்கை என்னும் நாடகத்தில் தனது பகுதியை தயக்கத்துடனும், ஏமாற்றத்துடனும் செய்பவனுக்கு, இது ஒரு சுமையாக இருக்கும். பாலகிருஷ்ணன் பிருந்தாவனத்தில் தரும் செய்தி இதுவே.

கிருஷ்ணன் தன் முதுமைப் பராயத்தில் குரு க்ஷேத்திரக் கண்ணனாகி, வாழ்வின் இன்னும் ஒரு அம்சத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார். உலகியல் வாழ்வு என்பது ஒரு உண்மையான யுத்தகளமாகும். எதுவும் ஒரு போராட்டத்தின் பின்தான் அடையப்படலாம்.

## கல்விப் பகுதி - 2

வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிபெற ஒருவன் முன்னோக்கி அடி வைக்கப் படும் போது தான், அவன் வெற்றி பெற்றதாகக் கருதப் படுவான். வாழ்வில் ஏற்படும் முட்டுக்கட்டைகளை எப்படி எதிர்கொள்ள வேண்டும். என்பதை ஸ்ரீ கிருஷ்ணரே செய்து காட்டியுள்ளார். இக் கோணத்தில் கிருஷ்ணருடைய உலகியல் தொழிற்பாட்டைப் பார்கும் போது முடிவற்ற போராட்டமாகவே இருக்கிறது. அவருடைய போதனையும், சாதனையும் இதனையே ஊர்ஜிதப் படுத்துகிறது. ஒருவனை இந்த வாழ்க்கைப் போராட்டத்துக்கு ஆயத்தப்படுத்தும் முறையினை கீதை கற்பிக்கிறது. தகுந்த ஆயத்தமின்றி வாழ்க்கை என்னும் போராட்டம் வெற்றிகரமாகாது. எனவே தான் யுத்த களமான குரு க்ஷேத்திரம் இச் செய்தியைச் சொல்லத் தகுந்த இடமாகத் தெரிவு செய்யப்பட்டது.

தொகுத்தளிப்பவர்:-
**திருமதி சி. இரவீந்திரன்**
தேசிய பாலவிஹாஸ்
இணைப்பாளர்

யுத்த முனையிலே ஸ்ரீ கிருஷ்ணருக்கும் அர்ஜுனனுக்கும் இடையே நடந்தது சம்பாஷனை அங்கு அறிவியல் நாட்டமோ ஆன்மீக நாட்டமோ உள்ள படித்தவர்களின் கூட்டம் அங்கிருக்கவில்லை, எனினும் இந்த தனிப்பட்ட சம்பாசனையை பதிவு செய்தல் எங்ஙனம் சாத்தியமாகி இருக்கும்?

எப்பொழுதெல்லாம் தெய்வீகம் மிக உயர்ந்த அவதார நோக்கத்துடன் அவதாரம் எடுக்கிறதோ அப்போதெல்லாம் திறமை வாய்ந்த ஞானி ஒருவரும் தூய வேலையைச் செய்யும் அதிகாரத்துடன் பூமியில் தோன்றுகிறார். தெய்வீக ஆளுமையுடன் தொடர்பான உன்னத நிகழ்வுகளைப் பற்றிய நம்பிக்கைக்குரிய பதிவுகளை மேற்கொள்வதே அவரின் தூய பணியாகும். இத்தகைய ஞானிகள் தரும் விளக்கங்களினாலேயே சூட்சுமமான தெய்வீக அவதாரம், தெய்வீக விளையாட்டுகள் யாவும் சாதாரண மனிதர்களுக்கு புரியக் கூடியதாக இருக்கிறது. வால்மீகி முனிவர் ஸ்ரீராமருடன் வந்தது போல, வியாசமுனிவர் ஸ்ரீ கிருஷ்ணருடன் தோன்றி கிருஷ்ணரின் அற்புத லீலைகளை எழுத்து வடிவத்தில் கொண்டு வந்தார். வியாசரிடம் உள்ளுணர்வு நிறைந்த அகக் காட்சி இருந்சுது. இடவேறுபாடு அவருக்கு ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை ஸ்ரீ கிருஷ்ணரின் மனதினைப் பிரதி பலிக்க வல்ல ஆன்மீக சக்தி நிறைந்தவராக அவர் விளங்கினார். அதை விடவும் சஞ்சயனுக்கு இந்த உள்ளுணர்வாற்றலைத் தற்காலிகமாக அளிக்க வல்லயோகசக்தி நிரம்பியவராகவும் விளங்கினார். நீதிநெறி நிரம்பிய மந்திரியான சஞ்சயன், கண்களிழந்த திருதராஷ்டிரனின் முன்னே அமர்ந்து, தூரத்தே யுத்த முனையில் நிகழ்ந்த விடயங்களை பார்த்தும் கேட்டும் மிக நுணுக்மாக அறிவித்தார். இவ்வகையில் மூன்று ஆசிர்வதிககப்பட்ட ஆத்மாக்கள், ஒரே வேளையில் பகவத் கீதை என்னும் தேவாமிர்தத்தை பகிர்ந்து உண்ணக்கூடிய அரிய வாய்ப்பைப் பெற்றனர்.

அர்ஜுனன் அருகில் இருந்து உடனுக்குடன் கீதையாகிய தேவாமிர்தத்தைப் பருகிய அதே வேளையில் தூரத்தே இருந்து வியாசரும், சஞ்சயனும் அதைச் சுவைக்கும் பேறைப் பெற்றனர். வியாசர் அதை எழுதிக் கொண்டு போகையில், சஞ்சயன் அறிய ஆவலுற்ற அந்தக மன்னனான திருதிராடிஷ்னுக்கு கூறினார். இருந்த போதிலும் பௌதிக ரீதியாகவும், மனோரீதியாகவும் குருடனாகவிருந்த மன்னனுக்கு இந்த ஞான அருள் மொழிகள் வெற்றுவார்த்தைகளாகவே இருந்தன.

இவ்விடத்தில் எமது உள்ளுணர்வாற்றலையும் வானொலியையும் ஒப்பு நோக்குவது பொருத்தமானது வானொலியானது காற்றில் கலந்து வரும் ஒலியலைகளை (மின்காந்த) வாங்கி மீண்டும் ஒலியை அலைகளாகப் பரப்புகிறது. காது கொடுத்து வானொலியைக் கேட்பவர்கள் அனைவரும் அவ்வொலி அலைகளைப் பெறமுடியும். ஆனால் உள்ளுணர்வாற்றல் என்பது தனித்துவமும் அந்தரங்கமும் உடையது. எல்லோரும் பங்கு போட முடியாதது. ஆனால் அனுபவிப்பவரை ஒரு ரிஷியாக மாற்றும் சக்தி பெற்றது. ஞானம் பெற்ற பெரியோர்கள் மொழியின்றியே எண்ண அலைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் இந்த ஆன்மீக ஆற்றல் வியாசரிடம் இருந்தது. இறைவனின் இந்த தெய்வீக செய்தியைப் பதிவு செய்ததன் மூலம் அவர் மனித குலத்துக்கு மிகப் பெரிய சேவை செய்துள்ளார்.

கீதையானது படுகொலைக்கான ஒரு நற்செய்தியா..? அல்லது பாதுகாப்பதற்கான ஒரு நற்செய்தியா..? என்ற வினா பலரின் மனதிலும் எழுவது இயல்பே. தேரிலிருந்து இறங்க முற்பட்ட அர்ஜுனனைத் தேரேற்றி போர் புரியச் செய்வதற்காகவே இந்த சம்பாஷனை நடைபெற்றது எனப் பலர் வாதிடலாம்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

கருமப்பலனில் அவாவினை விடாதவன் யோகியாக முடியாது என்பது திண்ணம் ~பகவத் கீதை~

# உண்மையான வாழ்வு என்றால் என்ன?

*மானிப்பாய் சத்தியசாயி நிலைய மண்டபத்தில் 23–11–2002 அவதாரதின விழா சிறப்பாக நடைபெற்றது.*
**கலாநிதி செல்வி வசந்தி அரசரட்ணம்**
*அன்று சிறப்புரையாற்றினர், உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது*

தொகுப்பு: ***செ. சுமங்கலா***

உண்மையான வாழ்வு என்றால் என்ன? நாம் எல்லோரும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் எதற்காக வாழ்கிறோம் என்பது ஒவ்வொருவருக்கும் அது வித்தியாசப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. எமக்கு குடும்பங்கள் இருக்கிறது பிள்ளைகள் இருக்கிறார்கள் நாம் வாழ்கிறோம் எதற்காக வாழ்கிறோம் அது எமக்கு தெரியவில்லை.

இந்த உலகத்தில் எதுவுமே நிரந்தரமில்லை. வாழ்க்கையாகட்டும், உலகியலாகட்டும், செல்வங்களாகட்டும் அல்லது உங்கள் நெருங்கிய உறவினர்களாகட்டும் இவையெல்லாம் நகர்ந்து செல்லும் மேகங்களை போன்றவை. மனித வாழ்க்கை என்பது மிகவும் மதிப்புமிக்கது. ஐந்து புலன்களை கொண்டது ஆறு அறிவுகளைக் கொண்டது. மனிதன் சம்சாரகடலில் நடந்து செல்கிறான் தனது பாதை எங்கே போகிறது எப்படி போகவேண்டும் என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டு இருக்கிறான். நாங்கள் எல்லோரும் "நான் யார் என்ற கேள்வி கேட்டால்" எமது உடலை தான் கருதுகிறோம். நாம் எல்லோரும் உடல் அல்ல எமது உடல் மூடியிருக்கிற ஆத்மா. அதுதான் மனிதன்.

## உடல் அல்ல ஆத்மா

இதை நாம் மறந்து விடுகிறோம். நாம் யோசிப்பது எமது உடல் எமது உடல் தான் முக்கியம் என்று நினைத்து அதை கழுவுகிறோம், குளிப்பாட்டுகிறோம் எத்தனையோ செய்கிறோம் ஆனால் நாம் நினைப்பதில்லை உடல் நிரந்தரமற்றதென்று. என்று பாபா கூறியிருக்கிறார்.

"தெருவால் போகும் ஒருவர் எனது காலணி அறுந்து விட்டது இதை இங்கே வைத்து விட்டு போகிறேன் நாளைக்கு வந்து எடுத்துக்கொள்கிறேன்" என்றார். அதற்கு அந்த வீட்டுக்காரர் சம்மதிக்கிறார்.

ஆனால் அதே நேரம் நாம் ஒருவருடன் போகிறோம் அவர் இடையில் இறந்து விட்டார். அவருடைய ஆத்மா அவரை விட்டு வெளியே போய்விட்டது நாம் அயல் வீடுட்டுக்காரரை தட்டி நான் இந்த பிணத்தை வைத்துவிட்டு போகிறேன் நாளைக்கு வந்து எடுக்கிறேன் என்றால் எவராவது ஆம் என்று சொல்லுவாரா இல்லை.

ஆகவே எமக்கு முக்கியமானது உடல் அல்ல ஆத்மா. ஆத்மா எவ்வளவு முக்கியமானது அதை எவ்வாறு பக்குவப்படுத்த வேண்டும் என்பதை நாம் அறிய வேண்டும். நாம் எமது பணம் பொருள் போன்றவற்றை யாராவது களவெடுத்து விடுவார்கள் என்று பூட்டி வைத்திருக்கிறோம். அதேபோல் நல்ல குணங்களையும் நாம் எமது மனதுக்குள்ளேயே பூட்டி வைத்திருக்கிறோம்.

வெளியில் நாம் எங்களுடைய பணத்தை மற்றவர்களுக்கும் கொடுத்து அவர்களையும் வரவேற்று அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது ஏற்படுகின்ற சந்தோசத்தை பற்றி எவரும் கருத்தில் கொள்வதில்லை. எனது தாயாரின் காலத்தில யார் விட்டிற்கு வந்தாலும் சாப்பாடு கொடுப்பார்கள் இப்பொழுது எங்கள் வீட்டிற்கு யாராவது வந்தாலும் அவர் களை சாப்பிடுங்கோ என்று கேட்க யோசிப்போம். நாம் எமது மனத்தினுள் நல்ல கருத்துக்களை நல்ல எண்ணங்களை மூடி வைத் திருக்காமல் அதை வெளியில் திறந்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டால் அதில் ஏற்படுகின்ற மகிழ்ச்சி மிகமிக அதிகம்.

எம்மிடம் நல்ல குணம் மேலோங்க வேண்டும். எனில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று பாபா கூறுகிறார். "கொடுமையான எண்ணங்களை உணர்ச்சிகளை தன்னிடம் இருந்து அகற்றிக் கொள்ள வேண்டும். பொறாமை, வெறுப்பு, அகங்காரம் போன்றவை. சாதுவான பசுமாடுகள் கட்டப்பட்ட தொழுவம் மிகவும் அமைதியாக இருக்கும். அதற்குள் ஒரு ஓநாய் புகுந்து விட்டால் தொழுவம் அல்லோலப்பட்டு சாந்தியை இழந்துவிடும் இது போலத்தான் தீய எண்ணங்கள் குடிகொண்ட உள்ளமும் சாந்தியை இழந்துவிடும். எனவே தீய எண்ணங்களை விட்டு நல்ல எண்ணங்களை வளர்த்து நாம் இறைவனின் மலர்பாதங்களை அடையும் வழியை தேட வேண்டும்.

நாம் பிற உயிர்களில் அன்பு செலுத்த வேண்டும். ஆகக் குறைந்தது எம்மை சுற்றியிருப்பவர்களுடன் அன்பாய் இருக்க வேண்டும்.

தற்போது சுயநலம் தான் அதிகமாக காணபபடுகிறது. நாம் எல்லாவற்றையும் நிலையானது என்று நினைப்பதால் எமக்கு சுயநலம் அதிகமாக காணப்படுகிறது. மனிதன் செல்வமும் இளமையும் தான் நிரந்தரமானது என்று நினைக்கிறான்.

தனது மிருகத்தனமான இயல்பை வென்று மனித குணத்தை வளர்க்க வேண்டும் புரிந்து கொள்ள வேண்டும். தனது பலம் பலவீனத்தை அறிந்து கொள்ள வேண்டும். எது பலம் என்பதை அறிந்தவன் அந்த பலத்தை மற்றவர்களிடம் பிரயோகிக்கக கூடாது. இதில் ஒரு குறள் எனக்கு ஞாபகம் வருகிறது.

**"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக் காக்கின் என் காவாக்கால் என்"**

நாம் எமது காரியத்தில் ஒரு உயர்ந்த பதவியில் இருக்கிறோம் எமக்கு கீழ் வேலை செய்பவரை அழைத்து பேசுகிறோம். அது செய்யவில்லை இது செய்யவில்லை என்று எமக்கு கோபம் வருகிறது பேசுகிறோம். ஆனால் இதே தவறை எங்களுடைய உயர் அதிகாரி செய்திருந்தால் பேசுவோமா? பேசமாட்டோம் எங்களால் பேச முடியாது.

ஆனால் இந்த பேச்சை வாங்கியவர் பின்னேரம் வீட்டில் ஒரு சிறு பிரச்சினைக்கு மனைவிக்கோ பிள்ளைகளுக்கோ இங்கு காரியாலயத்தில் வாங்கியதை அங்கே காட்டுகிறார். இதை தான் குறள் கூறுகிறது. எங்கு எங்களுடைய கோபம் செல்ல கூடிய இடம் இருக்கிறதோ அங்கே எமது கோபத்தை காட்டக்கூடாது.

## தேவையறிந்து சேவை

ஒவ்வொரு மனிதனும் நல்லகுணம், நல்ல நடத்தை உள்ளவனாக இருக்கவேண்டும் யாரையும் துன்புறுத்தக் கூடாது ஏழைகளுக்கு சேவை செய்வதில் எம்மை ஈடுபடுத்த வேண்டும். எமது உடலால் செய்யக்கூடிய சேவைகளில் எம்மை ஈடுபடுத்த வேண்டும். பசித்தவன், இல்லாதவனுக்கு கொடு என்று பாபா கூறுகிறார்.

சமுதாயத்தில் பல இடத்தில் சேவை செய்ய தேவை இருக்கிறது. அதற்கு பல இடங்களில் இருந்து உதவி செய்ய ஆயத்தமாய் இருந்தும் சேவைக்கென வரும் பணம் இடைத்தரகர்களால் மோசடி செய்யப்படுகிறது. மனிதன் உண்மையானவனாக இருந்தால் சமுதாயம் முன்னேறுவதில் ஒரு தடையும் இருக்காது.

எமது சமுதாயம் எவ்வளவோ பின்தங்கி சீர்கெட்டு இருப்பதைக் காணலாம். ஒன்று எம்மிடம் ஒற்றுமையில்லை, சுயநல முள்ளவர்களாக பண்பற்றவர் களாக, பெரியோரை மதிக் காதவர்களாக இருக்கிறோம். உங்களுக்கே தெரியும் தற்கால பிள்ளைகள் அந்த மாஸ்டர் சொல்லிதந்தவர் என்று சொல்வதில்லை. அந்த வாத்தி படிப்பிச்சது என்று சொல்வது தான் அத்துடன் தமது தாய் தந்தையரைப பார்த்து அந்த மனுசியால் கரைச்சலாக இருக்கிறது.



# பெண்ணின் பெருமையை

## உலகிற்கு எடுத்துச் சொல்ல கிடைத்த நாள்

மானிப்பாய் சத்ய சாயி நிலையமண்டபத்தில் 19-11-2002 நடைபெற்ற மகளிர் தினத்தில் **திருமதி சி. இரவீந்திரன்** தேசிய பாவிஹாஸ் இணைப்பாளர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது

தொகுப்பு: *செல்வி செ. சுபத்திரா*

இன்று உலகிலே மாசுக்கள் பெருகி, சூழல் மாசடைந்திருக்கிறது. மக்களின் மனம் மாசடைந்திருக்கிறது. இவ்வாறாக எங்கும் மாசுபட்ட நிலையில் நாம் இன்று மகளிர் தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். சத்திய சாயி நிறுவனம் நவம்பர் மாதம் 19ஆம் திகதியை மகளிர் தினமாக பிரகடனம் செய்துள்ளது.

ஏனெனில் பெண்கள் தான் சமூகத்திற்கு ஆதாரமானவர்கள். அவர்களுக்கிடையே நல்ல ஒழுக்கங்களையும் சிறந்த இலட்சியங்களையும் வளர்ப்பதன் மூலம் ஏனைய பெண்களுக்கும் அதனை எடுத்துக் கூற வாய்ப்பளிக்கும் வகையிலே இன்று இந்த மகளிர் தினம் சாயி நிறுவனங்களிலே உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

பொதுவாகப் பெண்கள் என்றால் அபலைகள், பல வீனமானவர்கள் என்று நினைக்கிறார்கள். நவீன கருத்தியலாளர்கள் பெண்களுக்கு சமத்துவம் வேண்டும் என்ற வகையிலே சில போராட்டங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஆன்மீக நிறுவனமான சத்தியசாயி நிறுவனம் பெண்களுடைய ஆன்மீக சக்தியை உலகிற்கு எடுத்துக் கூறவும் அவர்களுடைய தியாக மனப்பான்மை, பக்தி, அவர்களுடைய மேன்மையை மேலும் மேலும் வளர்ப்பதற்காகவும் இந்த சமுதாயத்தினுடைய மேம்பாட்டுக்காகவும் இத்தினத்தை கொண்டாடுகிறோம்.

அதாவது பெண்கள் உடலியல் ரீதியில் பலவீனமாக இருப்பது போல் தோன்றினாலும் ஆன்மீக ரீதியில் ஆண்களுக்கு சளைத்தவர்கள் இல்லை என்பதை எடுத்துக் காட்டும் ஒரு தினமாகத்தான் இன்றைய தினம் இருக்கிறது.

பொதுவாகப் பெண்களுடைய இதயம் அன்பு நிறைந்ததாகவும் இரக்கமுடையதாகவும் இருக்கிறது. ஒரு ஆண் தொழிலுக்கு சென்று, வீட்டை நிர்வகித்து, குழந்தைகளை பராமரிப்பதற்கு அவனால் ஒரு சில நாட்களுக்கு மட்டுமே முடியும். பல ஆண்டுகள் முடியாது.

ஆனால் ஒரு பெண்ணானவள் குழந்தைகளை பராமரிக்கின்றாள். தொழிலுக்குச் செல்கின்றாள், வீட்டையும் நிர்வகிக்கின்றாள், அதேவேளை அனேகமாக தனது சமநிலையில் இருக்கின்றாள். அதற்கு காரணம் என்னவென்றால் பெண்களுக்கு 7 சக்திகளும் ஆண்களுக்கு 3 சக்திகளும் இருப்பதே ஆகும் என சுவாமி கூறுகின்றார். ஒரு பெண், 7 சக்திகளின் ஆற்றலால் தான் வாழ்கிறாள் என்று சுவாமி கூறுகிறார்.

இன்னும் கூறுகின்றார் ஒரு பெண் பட்டங்களைப் பெறலாம், தொழிலைப்பெறலாம் ஆனால் அவளுடைய முதல் இலட்சியம் இல்லமாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் ஒரு மரத்திற்கு ஆதாரமாக வேர் இருந்து அந்த முழுமரத்தையும் தாங்குவது போல சமூகத் திலே குடும்பம் என்கிற மரத்துக்கு ஆதாரமாக இருப்பது ஒரு பெண்தான்.

அந்த பெண்ணினுடைய மகத்துவம் எல்லோருக்கும் புரியவேண்டும். பெண்ணின் தியாகமனப்பான்மை, அன்பு இது மனிதர்கள் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டியது மிகமிக அவசியம். அந்த புரிந்துணர்வு இருந்தால் மட்டுமே சமூகத்தில் நன்றாக இருக்க முடியும்.

### இளம் பெண்களுக்கு

இளம் பெண்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் சிறு வயதிலிருந்தே நல்ல இலட்சியமுடைய பெண்களாக வளர்க்கப்பட வேண்டும். பக்தியின் அடிப்படையில் உயர்ந்த இலட்சியமுடைய பெண்களாக வளர்க்கப்படும் போது அவர்களுக்குள்ளே இருக்கும் ஆன்மீக சக்தி உசுப்பப்பட்டு எழுப்பப்படுகிறது.

அந்த ஆன்மீக சக்தியினால் அவர்களுக்குள்ளிருக்கும் பொறுமை, தியாக உணர்வு, சகிப்புத் தன்மை மேலும் மேலும் வளம்பெற்று வளர்கிறது. சிலர் நினைக்கிறார்கள் கடந்த காலங்களிலே தான் பெண்களிலே சாவித்திரி, கண்ணகி, சீதை, போன்ற பெண்கள் இருந்தார்கள் என்று. ஆனால் கண்ணகியைப் போன்ற கற்புக்கரசிகள் சாவித்திரியைப் போன்ற பெண்கள், சீதையைப்போன்ற பெண்கள் இன்றும் இருக்கிறார்கள்.

அந்த ஆற்றல் ஆன்மீக சக்தியினால் தான் உருவாகின்றது.

இன்று வாழ்கின்ற முறை மாறியிருக்கலாம். ஆனால் எமக்குள்ளிருக்கும் ஆன்மா என்றுமே மாறாது என்பதை உணரக்கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் பெண்கள் நல்ல இலட்சியமுடையவர்களாக ஆன்மீக சக்தி உள்ளவர்களாக வளர்க்கப்படும்போது அவர்களும் கூட நவீன கண்ணகிகளாக, சாவித்திரிகளாக, சீதைகளாக இருக்கமுடியும்.

இப்படி உறுதியாக இளம் பெண்கள் இருக்கும் போது எந்த தீய சக்தியும் அணுகாது இதைத்தான் சுவாமி மீண்டும் மீண்டும் சொல்கிறார்.

நவீன கோபிகைகள், நவீன ஆண்டாள்கள், கூட நம்மிடையே இருக்கிறார்கள். இன்று பர்த்தியிலே இந்த விழா நடந்து கொண்டிருக்கும் போது சயமா என்ற பெண்மணி சுவாமியினுடைய அருளுரையை மொழி பெயர்த்துக் கொண்டிருப்பார்.

அவரைக்கூட நாம் ஒரு ஆண்டாள் என்று தான் கூறவேண்டும். சுவாமியே அவரைப் போற்றிப்புகழ்கின்றார். எப்படியென்றால் அவருக்கு திருமணம் நிச்சயமானபோது "நான் நரகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன்" என்று அவர் சுவாமிக்கு தந்தி அடித்திருந்தார். சுவாமி தந்தியை பெற்றுக்கொண்டு அதற்கான முயற்சிகளை எடுத்தார்.

ஆனால் விதியின் பிரகாரம் அத்திருமணம் நடந்தேறியது. ஆனால் சிலநாட்களில் அவருடைய கணவர் இறந்து விட்டார். அது விதியின் பிரகாரம் தான் நிகழ்ந்தது. அவர் பின் சுவாமியின் பாதத்தில் சரணடைந்தார். அடைக்கலம் புகுந்தார். அவரிடம் கல்வி கற்றார்.

தற்போது அவர் அனந்தபூர் பெண்கள் கல்லூரியில் அதிபராக கடமையாற்றி சுவாமிக்கு சேவை செய்து கொண்டிருக்கிறார். அத்தகைய ஆன்மீக சக்தியை அவர் கொண்டிருந்தார். இன்று நம்மிடையே நவீன கோபிகைகளாக எத்தனையோ பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படியான சமுதாயம் உருவாக வேண்டும் என்று தான் சுவாமி மகளிர் தினத்தை கொண்டாடச் சொல்கிறார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# பெண்ணின் பெருமையை உலகிற்கு எடுத்துச் சொல்ல கிடைத்த நாள்

## குடும்பப் பெண்களுக்கு....

மணமாகிய பெண்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் குடும்பத்தில் இருந்து கொண்டு கூட இறைவனை அடைய முடியும். சுவாமி சொல்கிறார். குடும்பக் கடமைகளில் ஈடுபடும் போது பெண்கள் நேரமில்லை என்று கவலைப்படத் தேவையில்லை. நீங்கள் நாளாந்தம் செய்யும் கடமைகளிலே இறைவனை நினைத்துச் செய்யும் போது எமது தீய குணங்களை அகற்றுவதாக பாவனை செய்ய வேண்டும் என சுவாமி கூறுகிறார்.

அரிசியை களையும் போதும் அரிசியை அரிக்கும் போதும் இவ்வாறு நான் எனது தீய குணங்களை அகற்ற வேண்டும் என்று பாவனை செய்ய வேண்டும் என்றும், ரொட்டி மாவை அடித்துக் குழைக்கும் போது இதேபோல எனது அகங்காரத்தை அடித்து அகற்ற வேண்டும் என்றும் அந்த தோசை மாவோ அல்லது ரொட்டி மாவோ பொங்கி வரும் போது எமது அன்பு இவ்வாறு பொங்கியெழ வேண்டும் என்று பாவனை செய்ய வேண்டும். என்றும் சுவாமி கூறுகிறார்.

## பெற்றோர்களுக்கு....

அதுபோல் சுவாமி இந்த மகளிர் தினத்திலே பெற்றோருக்கும் அறிவுரை கூறுகிறார். பெற்றோர் தமது குழந்தைகளை பக்தியுள்ளவர்களாக வளர்க்க வேண்டும் என சுவாமி வலியுறுத்திக் கூறுகின்றார்.

அந்த நாட்டகளில் பெற்றோர் குழந்தைகளை வளர்க்கும் போது நல்ல மேன்மையுள்ளம் கொண்ட நல்ல இயல்பு கொண்ட குழந்தைகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் இன்றைய வாழ்க்கை முறையில் பணத்திற்கும் சுயநலத்திற்கும் முக்கியம் கொடுக்கும் காரணத்தால் பெற்றோர்கள் நல்ல இயல்புகளை வளர்ப்பதிலிருந்து தவறி விடுகிறார்கள்.

இன்றைய பெற்றோர்கள் திருதராஷ்டிரனைப் போன்றவர்கள் என்று நேரடியாக குற்றம் சாட்டுகிறார் சுவாமி. ஏனெனில் பாசம், பந்தம் வைப்பதனாலே பிள்ளையினுடைய தவறுகளை திருத்த முடிவதில்லை. என்னுடைய பிள்ளை என்ற அகங்காரத்தினால் திருதராஷ்டிரன் துரியோதனன் பிழையான வழியில் சென்று கூட வெரால் திருத்த முடியவில்லை.

அத்துடன் அவரது தாயர் கண்களை கட்டிக் கொண்டு இருந்தால் அவராலும் அந்தப்பிள்ளையை திருத்த முடியவில்லை. இன்றைய பெற்றோரும் அவ்வாறு இருப்பதால் தான் சுவாமி திருதராஷ்டிரனைப் போன்றவர்கள் எனக் கூறுகிறார்.

இந்த இடத்திலே நாம் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். எங்கள் பிள்ளைகள் தவறு செய்யும் போது அல்லது தப்புச்செய்யும் போது அதை தண்டிப்பதற்குரிய தைரியம் இருக்கவேண்டும். அன்பைச் செலுத்த வேண்டும் ஆனால் தவறு செய்யும் போது தண்டித்து அவர்களை நல் வழிப்படுத்தாவிட்டால் அவர்களால் எதிர்காலத்தில் எந்தவித பயனும் இராது. இந்த விளக்கத்துக்கு சுவாமி ஒரு கதையும் கூறியிருக்கிறார்.

## பிராமண இளைஞன் கதை

இந்தியாவில் ஒரு குடும்பம் இருந்தது. அந்த தம்பதிகளுக்கு ஒரே ஒரு மகன் அவன் மிகவும் செல்லமாக வளர்க்கப் படுகிறான் பின் அவன் அமெரிக்கா சென்று மேற்கத்தேய நாடுகளில் முற்றுமுழுதாக ஊறிவிடுகிறான். தனது கலாசாரத்தை மறக்கிறான். ஏன் தனது பெற்றோரைக்கூட மறந்து விடுகிறான்.

பின் அவன் மீண்டும் இந்தியாவுக்கு வருகிறான். அவனது பெற்றோர் வற்புறுத்தி அவனைக் கோயிலுக்குக் கூட்டிச் செல்கின்றனர். அவன் அந்தக் கோயில் காயத்திரி அம்மனைப் பார்த்து "Hello Gayathiri Mother how are You"? என்று கேட்கிறான்.

அப்போது அவனது தந்தை தலையில் அடித்து இப்படிப்பட்ட பிள்ளையைப் பெறுவதற்கா நான் இவ்வளவு தவம் செய்தேன் என மிகவும் மனம் வருந்துகின்றார். பெற்றோருக்கு ஒரு கடமை உண்டு. அவர்களது பிள்ளைகளை கலாசாரத்தைப் பேணுபவர்களாக கலாசாரத்தை மதிப்பவர்களாக தமது தாய்நாட்டைப் பேணுபவர்களாக தமது குடும்ப கௌரவத்தைப் பேணுபவர்களாக வளர்க்க வேண்டும் என பகவான் கூறுகிறார்.

இன்றைய தினத்திலே நாம் முக்கியமாக இவற்றை ஒவ்வொரு பெண்ணும் எவ்வாறு உணரவேண்டும் என்றால் எனக்கு இறைவன் ஆற்றலைத் தந்துள்ளான். அதனால் அந்த ஆற்றலைப் பயன்படுத்தி நல்ல ஒரு சந்ததியை உருவாக்க வேண்டிய கடமை உண்டு. பிள்ளைகளைக்கூட அந்த அன்பினால், சகிப்புத் தன்மையால் மாற்றவேண்டிய கடமை எனக்கு உண்டு என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணரவேண்டும்.

இளம் பெண்கள் தங்களுடைய எதிர்காலக் கடமைகளைப் புரிந்து கொள்ளும் அதேவேளை பெற்றோர் தமது பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்ற சிந்தனையை உருவாக்க வேண்டும்.

சுவாமி இத்தினத்தைக் கொண்டாடுவதன் நோக்கம் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும், பெண்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். என்பதற்காக இன்று தியாகா தனை செய்வது பெண்கள். எல்லாம் பெண்களாலேயே செய்யப்படும். எனவே இவ்வாறாக சுவாமியின் எதிர்பார்ப்பை நாம் எவ்வளவு தூரம் நிறைவேற்றியிருக்கிறோம் என்பது தான் எங்கள் முன் வைக்கப்பட்ட கேள்வி.

எனவே பெண்கள் பெண்களாகவே இருக்க வேண்டும். எந்த நவீன முறை வாழ்க்கை வாழ்ந்தாலும் அந்த ஆன்மீக சக்தியை நாம் தவறாது வளர்த்தால் அந்த ஆன்மீக சக்தியின் காரணமாக குடும்பத்தை மேம்படுத் முடியும, சமூகத்தை மேம்படுத்த முடியும் அந்த வகையில் உலகத்தைக்கூட மேம்படுத்த முடியும், பெண்கள் தமக்குள்ள இந்தக் கடமைகளை உணரவேண்டும். அதேபோல் ஆண்கள் பெண்களை மதிக்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பெண்ணால் தனது கடமைகளை சிறப்பாக நிறைவேற்ற முடியும.

ஒரு பெண் கண்ணீர் விடும் இடத்தில் அந்தக் குடும்பம் வாழாது இதை உணர்ந்து அவர்கள் தமது தாயை மதிக்க வேண்டும். ஏனைய பெண்களையும் மதிக்க வேண்டும். அப்போது தான் நாம் இந்த மகளிர் தினத்தைக் கொண்டாடுவதன் பெறுபேற்றை பெறமுடியும்.

எனவே சுவாமியை நன்றாக பிரார்த்திப்போம். இன்றைய தினம் பெண்களுடைய பெருமையை உலகிற்கு எடுத்துச் சொல்ல கிடைத்த ஒரு நாள். எனவே ஒரு பெண்ணினுடைய கடமையை, ஒரு தாயினுடைய கடமையை உணர்ந்து அதன்படி செயற்பட்டு சுவாமியின் அருளையும் ஆசியையும் பெறுவோமாக.

●●●